<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1,</u>
<u>ஜெயங்கொண்டம்.</u>
<u>C.C.No.137 /2022</u>

2026ம் ஆண்டு ஜூலை மாதம் 20ஆம் நாள் திங்கள் கிழமை அரசு தரப்பு சாட்சி–01, திருமதி. கௌரி என்பவரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் பிரமாணச் சட்டம் பிரிவு 4ன்படி) திரு.செ.சாஸ்தா குமரன், மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி.கௌரி | வயது | : | 33/26 |
| த/பெ/ க.பெ./ | : | மணிகண்டன் | தொழில் | : | **தனியார் வேலை** |
| ஊர் | : | **உடையார்பாளையம்** | நிலை | : | LW 01/PW01 |
| வட்டம் | : | | நாட்டினம் | : | இந்தியன் |
| மாவட்டம் | | | | | |

**(எதிரி ஆஜர் )**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் உடையார்பாளையத்தில் வசித்து தனியார் வேலை செய்து வருகிறேன். இந்த விபத்தில் இறந்து போன மணிகண்டன் எனது கணவர். ஆஜர் எதிரியை தெரியும். ஆஜர் எதிரியின் அஜாக்கிரதையால்தான் என் கணவருக்கு விபத்து ஏற்பட்டது. கடந்த 23.12.2021 அன்று காலை சுமார் 09.15 மணியளவில் எனது கணவர் வேலைக்கு செல்வதற்காக அவருடைய இருச்சக்கர வாகனத்தில் புறப்பட்டு போனார். நான் அவரை வழி அனுப்பி விட்டு வெளியில் நின்று என் கணவர் செல்வதை பார்த்து கொண்டிருந்தேன். கொஞ்ச தூரத்தில் அஜர் எதிரியின்

வீட்டின் முன்பு கடலையை காயவைத்து நடு ரோட்டில் மரக்கட்டையை போட்டு வைத்திருந்தார். அப்போது அந்த வழியே சென்ற என் கணவர் எதிரிலிருந்து வண்டி வந்த போது இடது பக்கமாக ரோட்டில் வண்டியை திருப்பிய போது எதிரி ரோட்டில் வைத்திருந்த கட்டையில் மோதி எனது கணவர் தூக்கி வீசப்பட்டார். அங்கு நின்று கொண்டிருந்த நானும் பஞ்சநாதன் என்பவரும் ஓடிபோய் எ னது கணவரை தூக்கி பார்த்தபோது எனது கணவர் இரத்த வெள்ளத்தில் அந்த இடத்திலேயே இறந்து விட்டார். ஆஜர் எதிரி ஜெயங்கொண்டம் – கும்பகோணம் சாலையில், கோடங்குடி மெயின்ரோட்டில் போக்கு வரத்திற்கு இடையூராகவும் கனவக்குறைவாகவும் அஜாக்கிரதையாகவும் ரோட்டில் கடலையை காய வைத்து அதில் கட்டையை போட்டதால்தான் எனது கணவருக்கு விபத்து ஏற்பட்டது. எனவே ஆஜர் எதிரி மீது நடவடிக்கை எடுக்க நான் பழூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **அந்த புகார் அ.த.சா.ஆ.01 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் கு/வி இல்லை.**

/ உண்மை நகல் /

ஒம்/-ப.கனிமொழி,
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 1,
ஜெயங்கொண்டம்.